# காலம் அவளது கைபிடித்து நகர்கிறது

உறுதிப் படுத்தப்படாத
உலக அழிவு
ஓர் நாள்
உண்மையாகிப் போனாலும்.

அதன் பின் வரும்
யாருமே அறியாத
ஆரம்பம் ஒன்றில்......
பூபதியின் பெயர்
பொறிக்கப்பட்டிருக்கும்.

பிறிதொரு முறை
பிறந்து வரமாட்டாள் என்பது
பிழையறப் புரிகிறது.

இறந்து போனவர்களுக்குத் தானே
இன்னோர் பிறப்பு
இருக்க முடியும்.

ஆனாலும் உள்ளம்
அவளை அழைக்கிறது.

நேற்று வரை
நிலவையும் நட்சத்திரங்களையும்
நிமிர்ந்து பார்த்து
நெடுமூச் செறிந்தவள்.

இன்று -
அண்டங்களே அதிசயித்து
அண்ணாந்து பார்த்து நிற்க
புவியீர்ப்புக் கப்பால்
புறையோடி நிற்கிறாள்.

அன்று
உரிமைப் பசிக்கு
உதவி கோரி நின்றோம்.

உலகநாடுகள் முன்
தமிழன்
வயிற்றுப் பசியை
வாகாட்டத்திற்கு வைத்தது
வல்லரசு.

அனைத்து நாடுகளும்
அண்ணாந்து பார்த்து நிற்க
உயரத்திலிருந்து விழுந்தன
உணவுப் பொட்டலங்கள்.

ஒருதலைப் பட்சமாக
உள்ளே வந்த வல்லரசால்
அரிசிப் பொதிகள் விழுந்த
அதே குச்சொழுங்கைகளால்
குப்பெனப் பீறிட்டது
குருதியாறு.

குச்சொழுங்கைகளில் பரவிய
குருதியாற்றுக்குக் குறுக்கே
நேருதேசத்துப் படையிடம்
நீதி கேட்டு
பூகோளம் அதிரப்
பூபதி நடந்தாள்.

அரிசி மூடைகள்
அருகில் இருக்கையில்
சோறின்றி மடிந்த
சோகம் நடந்தது.

முற்றுகைக்குட் சிக்கி
மூச்சுத் திணறிய தமிழுக்கு
காற்றுக் கொடுத்தாள்.

புனிதமான பூமிக்குள்
ஒரு —
பூகம்பத்தின் புகலுடம்பு
பூபதி
தமிழ்ப்புலர்வின் குடியிருப்பு.

வலம் வந்து வணங்கி
வரலாறு
வாழ்த்துப் பா இசைக்க
பதிவு செய்வதற்குப்
பக்கங்கள் போதாதென்று
சரித்திரம்-
அவள் சாவில்
விக்கித்து நிற்கிறது.

கணமும் தகராமல்
காற்று அவள்
கல்லறையில் சுழன்று வர
வரலாற்றுப் போக்கில் — தாமும்
வற்றாமல் வாழ்வதற்கு
அழியா வரம் பெற்றவளின்
அஸ்தி கேட்டு
காற்றிடம் சமுத்திரங்கள்
கையேந்தி நிற்கின்றன.

காலையில் வந்த கதிரவன்
கல்லறை வெளிச்சத்தில்
கண்கூசிக் கைகூப்ப
மாலையில் வந்த
மஞ்சள் நிலவு — அவள்
கல்லறையின் ஒளியை
கடன் கேட்டு நிற்கின்றது.

அந்தோ......
இலட்சிய வாதியின் சமாதியில்
இயற்கை
இரண்டறக் கலக்கிறது.

தாயே..... !
பிரபஞ்ச வரலாற்றின்
பிரமாண்டமான உச்சியில்
உயிரோட்டத்தோடு
உன்னை நீ
செதுக்கிக் செதுக்கிக்
செதுக்கிக் கொண்டாய்

உசத்தியாகப் பேசப்பட்ட
உலக அதிசயங்கள்
ஒதுங்கி நின்று பார்த்துநிற்க
பிறகும் யுகங்களும்
பிரமிப்பில் ஆழ்ந்து நிற்க
காலம் — உந்தன்
கை பிடித்து நகர்கிறது.

அதனால் சொல்லுகின்றோம்
உறுதிப் படுத்தப் படாத
உலக அழிவு
ஒரு நாள்
உண்மையாகிப் போனாலும்

அதற்குப் பின் வரும்
யாருமே அறியாத
ஆரம்பமொன்றிலும்
உந்தன் பெயர்
உயிர்த்திருக்கும்.



# மேஜர் ரஞ்சன்



செ. தயாளன்
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

வடமராட்சி - ஒப்பரேசன் லிபரேசன் நடந்து முடிந்த சில நாட்கள்.

சின்னதும், பெரியதுமாக - கடற்காற்றுக்குச் சாமரம் வீசிக் கொண்டிருந்த பனங்கூடலுக்கு நடுவில ரஞ்சன் நின்றான். இனி ஓடமுடியாது. நாலு பக்கத்திலும் பச்சை உடைப் பேய்கள் நெருங்கிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பனங்கூடலிற்குள் நின்ற மக்கள் ரஞ்சனை நடுவிலிருத்தி விட்டுச் சுற்றி நின்றனர்.

வழமையான விசாரணைகள் சித்திரவதைகளை நடாத்தி விட்டு இராணுவத்தினர் வெளியேறிச் சென்றார்கள். அன்று, ரஞ்சன் அங்கிருந்தது தெரிந்திருந்தால், அந்தப் பனங்கூடலிலும் பல உயிர்கள் பலியாகியிருக்கக் கூடும். அந்த மக்கள் தமது உயிரை விட ஒரு போராளியின் உயிரை பெறுமதியாகக் கருதியதால் ரஞ்சன் அன்று காப்பாற்றப்பட்டான்.

அன்றே, "இது மக்கள் தந்த உயிர். இந்த மக்களுக்காகத் தான், நான் வாழ்வதும் - சாவதும்" என உறுதி எடுத்துக் கொண்டான் ரஞ்சன் அவனது முடிவைக் கேட்டுக் கடலில் எழுந்த அலைகள் சிலவும் கரையில் மோதி ஆமோதித்தன.

ஒப்பரேசன் லிபரேசன் காலத்திலும், இந்தியப் படை இம்மண்ணை ஆக்கிரமித்திருந்த நேரத்திலும் வடமராட்சிப் பகுதியிலேயே ரஞ்சன் நின்றான். பகற்பொழுதுகளிலும், பயங்கரமான இரவு நேரங்களிலும் ரஞ்சனையும் அவனது தோழர்களையும் மக்கள் தான் மூடிக் காத்தனர். இந்தியப் படை வெளியேறி - சிறிலங்காவுடனான யுத்தம் தொடங்கியதன் பின்பு, வடமராட்சிப்பகுதியில் பலம் வாய்ந்ததொரு படையணியை உருவாக்க ரஞ்சன் இரவு பகலாகப் பாடுபட்டான். அதன் பின்பு அவனும் அவன் வளர்த்தெடுத்த தோழர்களும் வடமராட்சிப் பகுதி மக்களைச், சுற்றி நின்று காத்தனர்.

ரஞ்சன், ஒரு திறமையான போர் வீரன். அதே நேரம் இளகிய மனம் படைத்த போராளி, சின்னஞ் சிறுகளைக் கண்டால் எப்பவுமே மயங்கி விடுவான்.

மழைநீர் தேங்கி ஈரமாக இருக்கும் வீதிகளில், சில நேரம் இவனது வண்டி தயங்கும். உடனேயே சிச்சுப்பா என்ற படி சில்வண்டுகள் ஓடி வரும்.

அவர்களுடன் கதைப்பதா - புதைந்த வண்டியை எடுப்பதா அவன் தயங்கி நிற்பான். வண்டி உறுமிவிட்டு ஓய்ந்து நிற்கும். வீதியில் செல்லும் கிழவிகள் "என்ர ராசா" என்று கட்டி அணைத்து முத்தமிட்டுச் செல்வார்கள்: வெற்றிலை எச்சிலால் சிவந்த நெற்றியையும், கன்னத்தையும் அவன் சிரித்தபடியே துடைப்பான்.

சீ எச்சிலென்ற படி சின்னஞ் சிறுசுகளும் சிரிப்பார்கள். "இந்த சிரிப்பு நிரந்தரமாகி விட வேண்டும் என்பதற்காகத் தான்.

இண்டைக்கு நாங்கள் சாகிறம்' என்று செல்வான் ரஞ்சன். உண்மைதான், சாவை இவர்கள் தினமும் வரவேற்றதால் தான் இவர்கள் சாவில் வாழ்வு பெற்றார்கள். இவர்கள் வாழ்வதற்காக மரணித்தவர்கள்.

கோட்டை இராணுவ முகாம் மீதான இரண்டாவது தாக்குதல் முயற்சி.

கோட்டையின் வாசல் பக்கமாக உள்ளே செல்ல வேண்டிய அணியின் தலைவன் ரஞ்சன் தான். தாக்குதல் தொடங்கியது. ரஞ்சனும், அவனது தோழர்களும் முன்னேறினார்கள் ஒரு நிலையில் ரஞ்சனின் துப்பாக்கியை ரவை ஒன்று உடைத்தது. விழுந்த தோழனொருவனின் துப்பாக்கியை ஏந்தியபடி ரஞ்சன் கோட்டை மதிற்சுவரில் ஏறினான் ஆனால் அவனுடன் வருவதற்கு எவருமே இல்லை முன்னேறி வந்த வழியெங்கும் அவனுடன் வந்தவர்களெல்லாம் மரணத்தைத் தழுவியும், காயமடைந்தும் விழுந்து கிடந்தனர். அன்று புலிகள் பின் வாங்கினார்கள்.

சில நாட்களின் பின், கோட்டை முற்றுகை வெற்றி அடைந்தது ரஞ்சன் தனது முகாமில் ஒரு கோட்டையை எழுப்பினான். அதில் கோட்டையில் விழுந்த ஒவ்வொரு போராளியையும் படமாகப் பதித்தான். ஒவ்வொரு நாள் உதயத்தின் பொழுதும் அவர்களில் தான் கண்விழிக்க வேண்டும் என நினைத்தான். மனது மேலும் மேலும் உறுதி பெற்றது. "தாக்குதலை நடாத்த வேண்டும். ஆயுதங்களை எடுக்கவேண்டும். அந்த நினைவே இரவிலும் வந்து போனது.

சிலாவத்துறை இராணுவ முகாம் தாக்குதல், சிறிய இராணுவ முகாமை கைப்பற்றும் பணியில் ரஞ்சனும் ஒருவன். தாக்குதல் தொடங்கிச்சில நிமிடங்கள் சென்றன.

இரண்டு இராணுவ முகாமிற்கும் மத்தியில் இருந்த காவலரண் புலிகளால் கைப்பற்றப்படுகிறது. அக் காவலரணில் இருந்த இலகு இயந்திரத்துப்பாக்கியை எடுத்தான் ரஞ்சன். அத்துப்பாக்கி இராணுவத்தினரை நோக்கி ரவைகளைக் கக்கத்தொடங்கியது. அதே நேரம் சிப்பாய். ஒருவனின் துப்பாக்கி ரவைகள் ரஞ்சனின் உடலிலும் விழுந்தன. இன்று

ரஞ்சன் போராளியாக வாழ்ந்த மண்ணிலேயே, அவன் பெயரைச் சொல்லும் சிறுவர் பூங்கா ஒன்று, அதில் அவனும். அவனது தோழர்களும் நிழற்படமாக நினைவுகளைச் சொல்லியபடியே நிற்கிறார்கள்.

ஒளிக்கதிர் தெறிக்கும் உதயங்களின் போதும், மழை இருள் கூடும் அந்தி நேரங்களிலும் - சின்னஞ்சிறுசுகளெல்லாம், தாங்கள் நேசித்த சித்தப்பாவைப் பார்த்து அவருடன் கதைத்து, அவரின் இலட்சியத்தில் கலக்கிறார்கள்.

சித்தப்பாவின் கனவைப் போல நாளைய தேசத்தின் ஆயுதமேந்திய காவல் காரர்களாக அவர்கள் வருவார்களாம்.

- தமிழ் -